**MCOP: 70**/2026

Date: 03.07.2026.

ம.சா.1 துரைப்பாண்டியன் , த/பெ. ஆறுமுகம்

**<u>சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

நீங்கள் சாலையின் உங்களின் இருசக்கர வாகனத்தில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி செல்லும் போது எந்தவித சைகையும் செய்யாமல் தீடிரென பிரேக் போட்டதால் தான் பின்னால் வந்த 3வது எதிர்மனுதாரரின் இருசக்கர வாகனம் உங்கள் வாகனத்தின் மோதியது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தின் போது 3ம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இருந்தது மேலும் 3ம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு முறையான காப்பிடு சான்றிதழ் இருந்தது அதனால் 4ம் எதிர்மனுதாரர் தான் உங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதாரரை பொறுத்தவரையில் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>4ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

என்னுடைய வருமானத்தை காண்பிக்கும் வகையிலான ஆவணங்கள் எதுவும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 5 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளீர்கள் என்றால் சரிதான். வேறு தனியார் மருத்துவமனையில் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றதை காண்பிப்பதற்கான ஆவணம் எதையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீங்கள் மனுவில் கோரியுள்ள இழப்பீடு மிகவும் அதிகமானது என்றால் சரியல்ல. எனக்கு எதிரே வந்த

வாகனத்தை 1ம் எதிர்மனுதாரர் பால்துரை என்பவர் தான் ஓட்டிவந்தார் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்று எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாருக்கு விபத்தின் போது ஓட்டுநர் உரிமம் இல்லை எனவே 4ம் எதிர்மனுதாரர் உங்களுக்கு இழப்பீடு தரவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் உரிமையாளர் ஆகிய 3ம் எதிர்மனுதாரர் தான் உங்களுக்கு இழப்பீடு தர வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுகுறுக்குவிசாரணை:-** இல்லை

**ஒம்/—S.பிரியா,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**